*திரு. வை. சங்கரன் :* ஜட்ஜுகளுக்குள்ளே வித்தியாசம் பாராட்டாமல் சப்-ஜட்ஜ்களுக்கும் 58 வயது என்று நிர்ணயம் செய்ய முன் வருவார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** மாநில அரசாங்க ஊழியர்கள் ஓய்வு பெறும் வயது 55 என்று இருக்கிறது. ஆகவே, இதிலே வித்தியாசம் ஒன்றும் இல்லை.

*புலவர் கா. கோவிந்தன் :* கல்லூரிகளில் பணிபுரிய ஆசிரியர்கள் கிடைக்காமல் இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுடைய ஓய்வு கால வயதை அதிகரிக்கும் உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பள்ளி ஆசிரியர்கள் வயது 58 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. மற்ற ஆசிரியர்கள் வயதை உயர்த்த இப்போது உத்தேசமில்லை. எங்கே அவசியம் இருக்கிறதோ அவர்களுடைய செர்விஸ் நீடிக்கப்படுகிறது.

*திரு. இராம. அரங்கண்ணல் :* அனுபவசாலிகள் வேண்டுமென்ற காரணத்தால் டாக்டர்கள், ஆசிரியர்கள், ஜட்ஜுகள் போன்றவர்களுடைய ஓய்வுகால வயது அதிகரிக்கப்பட்டிருக்கிறது. கனம் முதலமைச்சர் அவர்கள் பள்ளி ஆசிரியர்களுடைய வயதை உயர்த்தும் உத்தேசம் இருக்கிறது என்று சொன்னார்கள். அந்த முறையில் ரிட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் கொடுத்து ஓராண்டுக்குமுன் பதவியிலிருந்து விலகியவர்கள்கூட தொடர்ந்து பதவியில் இருக்க உத்தரவிடப்படுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அவ்வாறு ரிட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் கொடுப்பதில் பல சிக்கல்களுக்கு இடம் ஏற்படும். ஆகவே, அம்மாதிரிக் கொடுப்பதற்கில்லை.

## *Tyre industry in the State*

* 34 *Q.*—Sri V. SANKARAN : Will the hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that the tyre industry in the State has been affected adversely, on account of shortage of raw materails; and

(*b*) if so, the steps the Government have proposed to take, to ease the situation?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) No representation has been received by the State Government from any of the tyre manufacturers in this State about difficulty in getting raw materials.

(*b*) Does not arise.

*திரு. வை சங்கரன் :* இதற்கான மூலப் பொருள்கள் நம்முடைய நாட்டில் கிடைக்கின்றனவா ? அல்லது வெளிநாடுகளிலிருந்து வர வேண்டுமா ? எதனால் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது ?

1st February 1966]

THE HON. SRI R. VENKATARAMAN : The hon. Member is fishing for information. Raw material by way of rubber is available to a large extent in our country. But it is also imported.

**திரு. ஜே. மாதா கவுடர் :** டயர் விலை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகிறது. மூலப் பொருள் இல்லாத காரணத்தால் அதிகரிக்கிறதா ? அப்படி அதிகரிப்பதைக் கட்டுப்படுத்த சட்டம் கொண்டு வர முடியுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இது மத்திய சர்க்கார் பொறுப்பு. ராஜ்ய சர்க்கார் ஒன்றும் செய்ய முடியாது.

**திரு. வை. சங்கரன் :** வெளிநாடுகளிலிருந்து இம்போர்ட் செய்யும்படியான மூலப்பொருள் தடைபட்டிருக்கிறதா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அந்த விவரமும் இந்த ராஜ்ய சர்க்காரிடத்தில் இருக்காது. மத்திய சர்க்காரிடத்தில்தான் இருக்கும்.

*Match factory*

* 35. *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to set up any match factory mechanised or otherwise, in the public sector in the Fourth Plan period in the State ; and

(*b*) if so, the details thereof ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) : There is no such proposal.

**திரு. ஜே. மாதா கவுடர் :** இயந்திரத் தீப்பெட்டித் தொழிற்சாலையை அமைத்தால் தீப்பெட்டி விலை குறைவாக இருக்கும் என்ற காரணத்தால் அதற்கு ஏன் முயற்சி செய்யக்கூடாது ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அந்த மாதிரி ஒரு ஏற்பாடு இல்லையென்று சொன்னேன். ஏன் என்பதற்கு இப்போது காரணங்கள் சொல்வதற்கில்லை.

**திரு. சா. கணேசன் :** இப்போது பல்வேறு பகுதிகளில் நெருப்புப் பெட்டிகள் கிடைக்கவில்லை என்ற புகார்கள் கிளம்பி இருக்கின்றன. சென்னையிலேகூட சில இடங்களில் நெருப்புப் பெட்டிகள் இல்லையென்று சொல்லிக் கொண்டு வருகிறார்கள். போதிய அளவு மூலப் பொருள்கள் சப்ளை செய்யப்படாததுதான் அதற்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது. ஆகவே, ஏதேனும் புது முறைகளை மேற்கொள்ள அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இப்போது பொட்டாஷியம் குளோரைடு ஷார்ட் சப்ளையாக இருக்கிறது. அது கிடைப்பதற்கான ஏற்பாடுகளைச் சர்க்கார் செய்துக்கொண்டிருக்கிறது என்று நேற்று ஸ்டேட்மெண்டில் சொல்லி இருக்கிறேன்.